# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு – 2023

## ஆறாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி

சமூக அறிவியல் மதிப்பெண்கள்:5[illegible]

I சரியான விடையை தேர்ந்தெடு. 6x1=

1. ஆரியர்கள் ________லிருந்து வந்தனர்.
   அ) சீனா ஆ) வடக்கு ஆசியா இ) மத்திய ஆசியா ஈ) ஐரோப்பா
2. புத்தர் தனது முதல் போதனை உரையை எங்கு நிகழ்த்தினார் ?
   அ) லும்பினி ஆ) சாரநாத் இ) தட்சசீலம் ஈ) புத்தகயா
3. நம் நாட்டின் தேசிய குறிக்கோள் வாய்மையே வெல்லும் ________லிருந்து எடுக்கப்பட்டது.
   அ) பிராமணம் ஆ) ஆரண்யகம் இ) வேதம் ஈ) உபநிடதம்
4. தேசிய கீதம் பாடுவதற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய கால அளவு
   அ) 50 வினாடிகள் ஆ) 52 நிமிடங்கள் இ) 52 வினாடிகள் ஈ) 20 வினாடிகள்
5. இந்திய விடுதலை நாளில் பறக்கப்பட்ட முதல் தேசியக்கொடி ________ அருங்காட்சியகத்தில் உள்ளது.
   அ) சென்னை கோட்டை ஆ) டெல்லி இ) சாரநாத் ஈ) கொல்கத்தா
6. வேளாண்மை என்பது ________ நிலைத் தொழிலாகும்.
   அ) முதன்மை ஆ) இரண்டாம் இ) மூன்றாம்

II கோடிட்ட இடங்களை நிரப்புக: 6x1

7. ஆதிச்சநல்லூர் ________ மாவட்டத்தில் அமைந்துள்ளது.
8. ________ முறையானது பண்டைய கால கல்வி கற்கும் முறையாகும்.
9. தற்போது பயன்படுத்தப்படும் வளங்கள் ________ வளங்கள் என்று அழைக்கப்படுகிறது.
10. பௌத்தத்தை நிறுவியவர் ________ ஆவார்.
11. இந்தியாவின் தேசியக் கனி ________
12. மூலப்பொருட்களைப் பயன்பாட்டுப் பொருட்களாக மாற்றுவது ________ எனப்படும்.

III பொருத்துக 4x1

13. ஆதிச்சநல்லூர் – தேசிய கீதம்
14. பிட்சுக்கள் – காடு
15. இயற்கை வளம் – துறவிகள்
16. ரவீந்திரநாத் தாகூர் – தங்க ஆபரணங்கள்

CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



IV குறுவினா (ஏதேனும் ஏழு மட்டும்) 7x2

17. வேத கால மக்களால் பழக்கப்படுத்தப்பட்ட விலங்குகள் யாவை?
18. வேத காலத்தில் பரிமாற்றத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயங்களின் பெயர்களைக் கூறுக.
19. சமணத்தின் மூன்று ரத்தினங்கள் எவை?
20. வளங்கள் என்றால் என்ன?
21. நிலையான வளர்ச்சி என்றால் என்ன?
22. தேசிய உறுதிமொழியை எழுதியவர் யார்?
23. மயில்கள் சரணாலயம் எங்குள்ளது?
24. வணிகம் என்றால் என்ன?
25. பண்டமாற்று முறை என்றால் என்ன?
26. பணம் கண்டுபிடிக்க வேண்டியதன் அவசியம் யாது?

V விரிவான விடையளி (எவையேனும் மூன்று மட்டும்) 3x5=

27. வேத கால பெண்கள் குறித்து ஒரு பத்தி எழுதுக.
28. பௌத்தத்தின் எட்டு நெறிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
29. இயற்கை வளங்களை வகைப்படுத்துக. ஏதேனும் மூன்றினை விவரித்து உதாரணத்துடன் விளக்குக.
30. மூலப்பொருட்களின் பயன்பாட்டின் அடிப்படையில் எவ்வாறு தொழிற்சாலைகளை வகைப்படுத்தப்படுகின்றன?

VI வரைபட பயிற்சி 5x1

31. இந்திய வரைபடத்தில் கீழ்கண்டவற்றைக் குறிக்கவும்

அ) நெய்வேலி
ஆ) வங்காள விரிகுடா
இ) அரபிக்கடல்
ஈ) இந்தியப் பெருங்கடல்
உ) கஞ்சமலை (சேலம்)

.../...

CamScanner

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com